முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 12.01.2026

O.S. No. 195/2022

பிவா,சா-1 ராஜதங்கம்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தாக்கல் செய்துள்ளேன். அந்த வாக்குமூலத்தில் 1959 ல் நடந்த விவரங்களை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த விவரங்களை எனகது அப்பாவை பெற்ற தாத்தா பாட்டி சொன்னார்கள் என்ற விவரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். உண்மையில் அந்த விவரத்தை சொல்லவில்லை என்றாலும் சொன்னதாக வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

வாதி ராஜாசிங் எனது அப்பாவின் 2 வது தாரத்தின் மகன் ஆவார். 2 வது தாரர் எனக்கு சித்தி முறை ஆகும். வழக்கில் எவ்வளவு பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் M.A , B,Ed படித்துள்ளேன். நான் சென்னையில் குடிநீர் வடிகால் வாரியத்தில் மேனேஜர் ஆக வேலை பார்த்து வருகிறேன். எனது அப்பா 2 தாரத்தின் பிள்ளைகளுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதற்காக அனைத்து பிள்ளைகளுக்கும் ராஜ என்ற வார்த்தையை முன்னொட்டாக பெயர்க்கு முன்னால் சேர்த்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

வழக்கு சொத்து எந்த வருடம், யாரால் எனது தாயார் பெயருக்கு வாங்கியது என்றால் தெரியாது. எவ்வாறு வாங்கப்பட்டது என்றால் தென்காசி மாவட்டம் களக்காடு பக்கத்தில் மாவடியில் ஊரில் எனது அம்மா பெயரில் உள்ள சொத்தை விற்று வாங்கியுள்ளார்கள்.

அந்த விவரத்தை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதற்கு காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. எனது அம்மா திருமணம் முடிந்து அவர் உயிருடன் இருக்கும் காலம் வரை எந்த சொத்தையும் பாராதினம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது அம்மாவின் பெயரிலுள்ள சொத்து ஆவண எண், தேதி, தரப்பினர்களின் விவரங்கள், யாரால் யாருக்கு எழுதப்பட்டது, அம்மாவின் கையொப்பமா அல்லது கைரேகையா, அதன் விவரங்களோ, சாட்சிகளின் விவரங்களோ எனக்கு தெரியாது. வழக்கில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் , 3 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன என்றால் 1. எனது அம்மா பெயரில் உள்ள விலை பத்திரம், மேற்படி விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

சாட்சி தற்போது ஆவணங்களை பார்த்து விட்டு அம்மா பெயரில் உள்ள பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். சாட்சி தற்போது அவரது கையில் அம்மா பெயரில் உள்ள பத்திரத்தை வைத்திருப்பதாக கூறுகிறார். ஏன் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் மீதான எனது உரிமை, அனுபவம்,பாத்தியத்தை காண்பிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. என் கைவசம் உள்ளது.

எனது பாட்டி 3 ம் தரப்பினருடன் ஏற்படுத்திய குத்தகை ஒப்பந்தத்தின் ப டி சொத்தை மீட்க அடமான தொகையை செலுத்துவதற்காக மருமகள் பெயருக்கு அப்பத்தா எழுதிய ஆவணத்தை நான் திருமண செலவிற்காக ஏற்படுத்திய ஆவணம் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேறு சொத்தை விற்று தாவா சொத்தை கிரயம் பெற்றதற்கு விற்று சொத்திற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அந்த விவரத்தை

எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ , பிராதை நிராகரிக்க செய்ய வேண்டிய மனுவிலோ சொல்லவில்லை என்றால் தெரியாது. அப்பா சொத்தில் மொத்த சொத்து மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. அவ்வாறு இருக்கும் போது எதன் அடிப்படையில் ¾ பங்கு வாதிக்கு கொடுத்ததாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் எனது அப்பா என்னிடம் சொல்லியுள்ளார். 1982 ல் எனது சகோதரி எனக்கு ஏழுதி கொடுத்த விடுதலை ஆவணத்தில் தேதி, எண், சாட்சிகள் போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

1982 ல் விடுதலை ஆவணத்திற்கு பிறகு, எனது சகோதரியும் , சகோதரியின் மாப்பிளையும் வழக்கு சொத்தை பராமரித்தாக சொல்லியிருப்பது தவறு என்றாலோ சகோதரியின் மாப்பிள்ளை அரசு ஆசிரியர் என்றாலோ அவர் இந்த மாவட்டத்தில் வெளியே வேலை பார்ப்பதால் அவரால் பராமரித்திருக்க முடியாது என்றால் சரியல்ல. எனது தங்கை இல்லத்தரசி ஆவார். அவர் மேற்பார்வை பார்த்து வந்தார் அவருக்கு 3 பிள்ளைகள் ஆகும். சகோதரியின் பிள்ளைகள் வாதியின் உரிமை நியாயமானது என்பதால் இந்த வழக்கை அவர்கள் எதிர் வழக்காடவில்லை என்றால் சரியல்ல. எனது தங்கையின் பங்கை கொடுத்துவிட்டதால் அவர்கள் இ ந்த வழக்கிற்கு வரவில்லை.

1982 ல் நானும் எனது தம்பியும் எனது தங்கையின் திருமணத்தின் போது அவளுக்கு சேர வேண்டிய சொத்தை எழுதிக்கொடுத்து விட்டு விடுதலை பத்திரம் பெற்றுகொண்டோம். எனது அம்மா சொத்தை எழுதிக்கொடுத்தோம் எனது அப்பா உயிருடம் இருந்த போது ஏன் நானும் ,எனது தம்பியும் எழுதிக்கொடுத்தோம் என்றால் எங்களது அம்மா சொத்தில் எனது அப்பாவிற்கு பங்கு இல்லை., அதனால் அவர் ஏழுதிக்கொடுக்கவில்லை. 1982 வருட ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால்

தெரியாது. எனது அம்மா சொத்தை எழுதிக்கொடுத்து விடுதலை எழுதி கொடுத்ததாக விடுதலை ஆவணத்தில் சொல்லப்பட்டதா என்றால் தெரியாது.

விடுதலை ஆவணத்தில் எனது தங்கையின் பாகம் எவ்வளவு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தங்கை விடுதலை பத்திரம் எழுதிய பிறகும் நான் எனது அப்பா, எனது தம்பி ஆகியோரின் கூட்டு அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. நான் மும்பையில் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. எனது தம்பி வேலை பார்த்தார். வழக்கு சொத்து எந்த காலத்திலும், அனுபவத்திலும், பராமரிப்பிலோ வாடகை வாங்கியதும் இல்லை என்றால் சரியல்ல.

பிவா.சாஆ 1 என்பது வாதி எனது அப்பாவிற்கு ஏழுதிக்கொடுத்த ஆவணம். அது பதிவு செய்த ஆவணமா என்றால் இல்லை. அதில் 2 பவது பக்கத்தில் எனது அப்பா, அம்மா காலம் வரை வேறு சொத்துகளை கேட்க மாட்டேன் என்று வாதி எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்துள்ளார். வாதியுடன் பிரச்சனை ஏற்பட்டு பெற்றோர்கள் வாடகை வீட்டில் வசிப்பதாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதில் அது வாடகை வீடு இல்லை என்றாலும், அது எனது அப்பாவின் வீடு என்றாலும் சரியல்ல.

தெங்கம் புதூரில் வாடகைக்கு இருந்த வீட்டை எனது அப்பா விலைக்கு வாங்கிவிட்டார். எத்தனை காலம் வாடகைக்கு இருந்தார், எப்போது கிரயம் வாங்கினார் என்றால் தெரியாது. எனது மகள் திருமணத்திற்கு எனது அப்பாவை அழைத்தேனா என்றால் அழைத்தேன், நான் சென்னையில் திருமணம் வைத்ததால் அவரால் வர முடியவில்லை. பிவா.சாஆ 3 புகாருக்கு வாதிக்கு விசாரணை அழைப்பாணை ஏதுவும் வரவில்லை என்றால் தெரியாது.

வழக்கு சொத்தில் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த

வழக்கின் வா.சா 2 அவரது சாட்சியத்தில் எனது அப்பாவுடன் ஏற்படுத்திய வாடகை ஒப்பந்த பத்திரத்தை தாக்கல் செய்து வாதியை வாடகை பெற்று வருவதாக கூறியுள்ளார் என்றால் பொய் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கான வாடகை யார் வாங்கியுள்ளார் என்றால் எனது தங்கையும், அவரது மாப்பிளையும் வாங்கி வந்தார்கள் .தற்போது வழக்கு சொத்தில் 3, 4 வருடங்களாக கட்டிடம் எதும் இல்லை. மேற்படி விவரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

வழக்கு சொத்தில் 10 நபர்கள் வாடகைக்கு இருந்தார்கள். 100 ரூ, 150 ரூ விதம் வாடகை வாங்கியுள்ளோம். மொத்தமாக மாதத்திற்கு ரூ .1000 லிருந்து வாடகை வரும். வழக்குரையை நிராகரிக்க வேண்டி தாக்கல் செய்த மனு சம்மந்தமான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய எதிர் வாதத்தை நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.